# மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.

முன்னிலை **திரு.பா.சரவணன், பி.எஸ்.சி., பி.எல்.,**
மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 5 ஆம் நாள் புதன் கிழமை

## இடைநிலை மனு எண்கள்.8/2026 மற்றும் 9/2026 ல்
## அசல் வழக்கு எண்.111/2018

V.காயத்ரி
க/பெ.R.K.விஜய் ... மனுதாரர்/2 ம் வாதி

/எதிர்/

1.P.ராமகிருஷ்ணன்
த/பெ.லேட்.N.பெரியசாமிபிள்ளை
மற்றும் 8 நபர்கள் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுக்களானது, கடந்த 30.07.2026 அன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/2 ம் வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.ஹூசேன் அவர்களும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ராஜ்குமார் அவர்களும் முன்னிலையாகியும், மனுக்கள், எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரைகள் மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாத பிரதிவாதங்களை கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்

## பொதுவான உத்தரவு

1) மனுதாரர்/2 ம் வாதி தரப்பில், இ.ம.எண்.8/2026 மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151 ன் கீழ் இந்த மனு தாக்கல்

செய்யப்பட்டு, அசல் வழக்கை மறுதிறவு (Re–open) செய்ய அனுமதிக்கக் கோரியும், இ.ம.எண்.9/2026 மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் வகுமுறை 18 விதி 17 மற்றும் 151 ன் கீழ் பி.சா.2–ஐ மீண்டும் அழைத்து, 2 ம் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மனுதாரர்/2 ம் வாதி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், மனுக்களில் கூறியுள்ள சங்கதிகளையே விவரித்துக்கூறி, அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால் விளம்புகை மற்றும் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அசல் வழக்கில் 06.06.2026 அன்று பி.சா.2 ன் குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், அன்று பி.சா.2 ன் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜரானார் என்றும், ஆனால் அவரை குறுக்கு விசாரணை செய்யப்படாததால் விசாரணை முடிக்கப்பட்டதாகவும், 02.06.2026 அன்று ஏற்கனவே உத்தரவிடப்பட்ட பி.சா.2 க்கான செலவுத்தொகையை தாக்கல் செய்வதற்கும் மற்றும் பி.சா.2 யை குறுக்கு விசாரணை செய்வதற்கும் வாய்தா போடப்பட்டிருந்ததாகவும், அன்று மனுதாரருக்கு கடுமையான வயிற்று வலி ஏற்பட்டதால் கோயம்பத்தூரிலிருந்து நேரில் வந்து ஆஜராக இயலவில்லை யென்றும், தற்போது அசல் வழக்கில், மற்ற சாட்சிகளின் சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், பி.சா.2 ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டுவிட்டதாகவும், இது வேண்டுமென்றே

ஏற்பட்டதல்ல என்றும், மேலும், மனுதாரர் தரப்பில், பி.சா.2 யை குறுக்கு விசாரணை செய்ய வேண்டியிருப்பதால் வழக்கை மறுதிறவு செய்து, மனுதாரர்/2 ம் வாதி தரப்பை உறுதிப்படுத்த பி.சா.2 ஐ குறுக்கு விசாரணை செய்ய வேண்டியது அவசியம் என்றும், எனவே, வழக்கை மறுதிறவு(Re–Open) செய்து, பி.சா.2 ஐ மனுதாரர்/2 ம் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்க வேண்டுமென்றும், அப்போது தான் வழக்கின் உண்மைநிலையை வெளிக்கொண்டுவர முடியும் என்றும், எனவே, இந்த மனுக்களை அனுமதிக்க வேண்டுமென்றும், இல்லாவிட்டால் மனுதாரருக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு ஏற்படும் என்றும் வாதிட்டார்.

3) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிருரைகளில் கூறியுள்ள சங்கதிகளையே விவரித்துக்கூறி, அசல் வழக்கில், பி.சா.2 ஐ மீண்டும் அழைத்து விசாரணை செய்ய எவ்வித முகாந்திரமும் இல்லையென்றும், பி.சா.2 ஐ வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை செய்வதற்க்காக 07.04.2026, 16.04.2026, 02.06.2026 வாய்தா போடப்பட்டபோதும், பி.சா.2 க்கு 06.06.2026 க்குள் செலவுதொகை செலுத்த உத்தரவிட்டும், வாதிகள் தரப்பில் ஆஜராகவில்லையென்றும், பின்னர், தாமாக பி.சா.2 ன் குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டு, மற்ற சாட்சிகள் விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளதாகவும், இந்நிலையில், வழக்கை மறுதிறவு செய்து பி.சா.2 ஐ மீண்டும் குறுக்கு விசாரணை செய்வதற்கு மனு தாக்கல்

செய்துள்ளதாகவும், இந்த மனு தாக்கல் செய்துள்ளதற்கு மனுதாரர் தரப்பில் தகுந்த காரணம் எதுவும் குறிப்பிடப்படவில்லையென்றும், வழக்கை இழுத்தடிக்கவே இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே, இந்த மனுக்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

4) இந்த மனுக்களில் பரிசீலிக்கப்பட வேண்டியது என்னவென்றால் இந்த 2 மனுக்களும் அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதாகும்.

5) இருதரப்பு கருத்துகளும், வழக்கு ஆவணங்களும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது பாகப்பிரிவினை, விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) அசல் வழக்கில் பி.சா.2 ஐ விசாரணை செய்து, மற்ற சாட்சிகள் விசாரணைக்காக வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், மனுதாரர்/2 ம் வாதி தரப்பில் அசல் வழக்கை மறுதிறவு செய்து, பி.சா.2 ஐ மீண்டும் அழைத்து மனுதாரர்/2 ம் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) விசாரணை நீதிமன்றத்தில், வழக்கின் தரப்பினர்கள் அவர்களது வழக்கை நிரூபிக்க, உரிய வாய்ப்பு வழங்குவது நீதியின் நலன் கருதி அவசியமாகிறது.

மனுதாரர்/2ம் வாதி, அவரது தரப்பை நிரூபணம் செய்ய, அசல் வழக்கை மறுதிறவு(Re open) செய்து, பி.சா.2 ஐ, மீண்டும் அழைத்து மனுதாரர்/2ம் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய, ஒரு வாய்ப்பு வழங்குவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றத்தால் முடிவு செய்யப்படுகிறது. அதேசமயம் மனுவை அனுமதிப்பதால், எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு ஒரு நியாயமான செலவுத்தொகையும், ஏற்கனவே விசாரணை செய்யப்பட்ட பி.சா.2 ஐ திரும்ப அழைப்பதால், அவருக்கு ஏற்படும் இன்னலுக்காக நியாயமான செலவுத் தொகையை செலுத்த உத்தரவிட்டு மனுக்களை அனுமதிக்கலாம் என்றும் முடிவு செய்யப்படுகிறது.

8) **முடிவாக,**

இந்த 2 மனுக்களும் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதிக்கப் படுகிறது,

1) மனுதாரர்/2ம் வாதி இந்த இ.ம.எண்.8/2026 மற்றும் இ.ம.எண்.9/2026 ஆகிய மனுக்களின், செலவு தொகையாக எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு மொத்தமாக **ரூ.1000/-**மும் (ரூபாய் ஆயிரம் மட்டும்), பி.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட சாட்சிக்கு அவர் விசாரணைக்காக நேரில் முன்னிலையாகும் போது, **ரூ.500/-**ம் (ரூபாய் ஐநூறு மட்டும்) செலுத்தும்பட்சத்தில், இந்த மனுக்கள் அனுமதிக்கப்படும் என்றும், தவறும்பட்சத்தில் இந்த மனுக்கள் தானாக

தள்ளுபடியாகும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க வாய்தா **12.08.2026.**

2) அவ்வாறே மேற்படி செலவுத்தொகை செலுத்தி, மனுக்கள் அனுமதிக்கப்படும் நிலையில், பி.சா.2 முன்னிலையாகும்போது, அவரை அன்றே குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

இந்த பொது உத்தரவு, என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்தபின், என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 05 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

SARAVANAN B
Digitally signed by SARAVANAN B
Date: 2026.08.05 17:10:32 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை.

SARAVANAN B
Digitally signed by SARAVANAN B
Date: 2026.08.05 17:10:38 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**